கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொது சுகாதாரத்துறையும், லயன்ஸ் கிளப் இணைந்து நடத்தும் தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாமிற்கான விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (11.02.2017) கொடியசைத்து, துவக்கி வைத்தார்.

செ.வெ.எண்: 110/2017 நாள்: 11.02.2017

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாமிற்கான விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை இன்று கொடியசைத்து, துவக்கி வைத்தார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொது சுகாதாரத்துறையும், லயன்ஸ் கிளப் இணைந்து நடத்தும் தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாமிற்கான விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (11.02.2017) கொடியசைத்து, துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

தமிழக அரசு 06-02-2017 முதல் 28-02-2017 வரை 9 மாதம் முடிந்த குழந்தைகள் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள்/மாணவர்கள் மற்றும் மாணவிகள் அனைவருக்கும் தட்டம்மை ருபெல்லா (Measles Rubella) தடுப்பூசி போடப்பட உள்ளது. தட்டம்மை - ருபெல்லாவால் ஏற்படும் நோய் மற்றும் இறப்பு விகிதத்தை குறைப்பதே இதன் நோக்கமாகும்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளி, தனியார், உறைவிடப் பள்ளிகளிலும், பள்ளி செல்லா குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும் மற்றும் சிறப்பு தடுப்பூசி மையங்களிலும் 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு தட்டம்மை - ருபெல்லா தடுப்பூசி போடப்பட உள்ளது. ஒவ்வொறு பள்ளிகளில் உள்ள ஒருங்கிணைப்பு ஆசிரியர் மூலம் இப்பணி சுமூகமாக செயல்படுத்தப்படும். இதற்கு முன் இவ்வகை ஊசி போடப்பட்டிருந்தாலும் தடுப்பூசி முகாம் நடைபெறும் நாட்களில் தடுப்பூசி போடப்பட வேண்டும். ஒரு முறை உபயோகிக்கப்படும் ஊசியினைக் கொண்டு வலது கையில் நன்கு பயிற்சி பெற்ற கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் போடப்பட உள்ளது.

தடுப்பூசி முகாமிற்காக மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மற்றும் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகள் அனைத்தும் பாதுகாப்பான முறையில் (Cold Chain) தடுப்பூசி முகாம்களுக்கு எடுத்து செல்லப்படும்.

நமது மாவட்டத்தில் மொத்தம் **1,224** பள்ளிகள்,**1401** சத்துணவு மையங்களில் நடைபெறும் தடுப்பூசி முகாம் மூலம் 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள **444603** பயன் அடைவார்கள். இதற்கு தேவையான 5 லட்சம் தடுப்பூசிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் இணைந்து இத்திட்டத்தினை நல்முறையில் செயல்படுத்துவார்கள்.

இதுவரை நமது மாவட்டத்தில் 25,034 குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மரு. டி.எஸ். மாதவன்பிள்ளை, நகர்நல அலுவலர் மரு. எஸ். வினோத்ராஜா, தாய்சேய் நலஅலுவலர் திருமதி. எஸ். பியூலா, அரிமா சங்க ஆளுநர் திருமதி. எஸ்.சுதந்திரலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.